கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30.11.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "மாநில அளவிலான அறிவியல் ரீதியான தேனீ வளர்ப்புப் பயிற்சி"

தேசிய தேனீ வாரியம் (National Bee Board) திட்டத்தின் கீழ் 7 நாட்கள் பயிற்சித் திட்டமான "மாநில அளவிலான அறிவியல் ரீதியான தேனீ வளர்ப்புப் பயிற்சி" (28.11.2024 முதல் 04.12.2024 வரை) 28.11.2024 அன்று வேளாண் பூச்சியியல் துறையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் தொடங்கப்பட்டது. இந்த பயிற்சியில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 விவசாயிகள்/பயனாளிகள் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர். இரா.தமிழ்வேந்தன் அவர்கள் தலைமை உரையாற்றினார். நிகழ்ச்சியில் தேனீக்கள் குறிப்பிடத்தக்க நினைவாற்றல் கொண்ட அசாதாரண உயிரினங்கள் எனவும் தனது தேன்/மகரந்தம் உள்ள இடத்தை நன்கு நினைவில் வைத்துக் கொண்டு அவற்றின் தனித்துவமான நடனம் மூலம் அதனை மற்ற தேனீக்களுக்கு தெரியப்படுத்தும் என கூறினார். தேனீ அதன் குறுகிய ஆயுட்காலத்திற்குள் (35–40) அதன் கூட்டினை கட்டுவதற்கு கற்றுக்கொள்ளும் திறனைப் பற்றி பகிர்ந்து கொண்டார். தனிநபர்கள், விவசாயிகள் மற்றும் ஒட்டுமொத்த தேசத்திற்கும் தேனீ வளர்ப்பினால் ஏற்படும் பல நன்மைகளையும் அவர் வலியுறுத்தினார்.

பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் முனைவர். M.சாந்தி தனது பாராட்டுரையில், தேனீ வளர்ப்பின் முக்கியத்துவத்தையும், விவசாய உற்பத்தியில் அதன் தொடர்பையும் வலியுறுத்தினார். அவர் தேனீ அல்லாத தேன் சார்ந்த பொருட்களின் மதிப்பை எடுத்துரைத்தார். மேலும் தேனீ வளர்ப்பு மன அழுத்தத்தை குறைக்கும் தன்மை உடையது என கூறி பங்கேற்பாளர்களை ஊக்குவித்தார். தேனீ வளர்ப்பு பற்றி அறிந்து கொள்வதில் காவல் மற்றும் பாதுகாப்பு துறை பணியாளர்களிடயே ஆர்வம் அதிகரித்து வருவதை அவர் குறிப்பிட்டார். தேர்வுக் கட்டுப்பாட்டாளர் முனைவர் V.பாலசுப்ரமணி, தேனீ வளர்ப்பில் தொழில் முனைவோர்க்கான வாய்ப்புகளை எடுத்து கூறி ஆராய மாணவர்களையும் பங்கேற்பாளர்களையும் ஊக்கப்படுத்தினார்.

பூச்சியியல் பேராசிரியரான முனைவர் M.R.சீனிவாசன் அவர்கள் இப்பயிற்சித் திட்டம் பற்றி எடுத்துக் கூறி, புதுதில்லியில் உள்ள தேசிய தேனீ வாரியம், தமிழ்நாட்டில் உள்ள 19 மாவட்டங்களில் வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் விவசாயக் கல்லூரிகள் மூலம் பயிற்சிக்கு நிதி உதவி அழிதமைக்கு நன்றி கூறினார். வேளாண் பூச்சியியல் துறையின் பேராசிரியரும், தலைவருமான முனைவர் மா.முருகன் பங்கேற்பாளர்களையும் மாணவர்களையும் வரவேற்று, பயிற்சித் திட்டத்தின் நோக்கங்களை கூறினார். இந்த ஏழு நாள் பயிற்சியில், பங்கேற்பாளர்களுக்கு தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம், தேனீ இனங்கள் மற்றும் நடத்தை, தேன்/மகரந்தம் சேகரிப்பு, பூச்சி மற்றும் நோய்கள் மேலாண்மை, தேனீயின் மூலம் பெரும் பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டல், மகரந்தச் சேர்க்கையில் அவற்றின் பங்கு, தேன் பிரித்தெடுத்தல், தரக் கட்டுப்பாடு மற்றும் சோதனை, தேனீ நச்சு மேலாண்மை, பருவகால மேலாண்மை மற்றும் தேனீ வளர்ப்பில் வணிக வாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும் என கூறினார். இறுதியாக, பூச்சியியல் துறை பேராசிரியர் முனைவர் V.R.சாமிநாதன் நன்றியுரை ஆற்றினார். கூட்டத்தில் கலந்து கொண்டு இந்தப் பயிற்சித் திட்டத்தை நடத்துவதில் உதவிய விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**